CC 523/2007

PW - பாலாஜி த/பெ.ராஜசேகரன்

**( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிகள் ஆஜர்**

**3 வது எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கின் அனைத்து எதிரிகளும் TVS SRI CHAKRA நிறுவனத்தின் CITU தொழிற்சங்க ஊழியர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் முறையாக விசாரணை செய்யாததால்தான் எதிரிகள் தொழிற்சங்க ஊழியர்கள் என்று தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 3ம் எதிரியை எந்த தேதியில், எப்போது கைது செய்தேன் என்றால் 24.07.2007ம் தேதி அதிகாலை 05.30 மணிக்கு. 3ம் எதிரியை கைது செய்வதற்கு முன்பாக அவரது தாயார் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும், மேலூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் 3ம் எதிரி மேலூர் காவல் நிலையத்தில் சட்டத்திற்கு புறம்பாக கைது செய்து வைக்கப்பட்டிருப்பதாக தந்தி அனுப்பியுள்ளார் என்றால் அதுகுறித்த ஆவணங்கள் கோப்பில் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் தந்தி மேற்கூறியவை என்றால் அந்த ஆவணத்தில் உள்ள எழுத்துக்கள் எனக்கு புரியவில்லை. **(அந்த தந்தி சான்றிட்ட நகல் எண்ணிக்கை இரண்டு எதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ வரலாறு படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் படிக்க தெரியும் என்றால் தெரியும். மேற்கூறிய தந்தியில் தெளிவாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது, அவை தெரியவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) இவ்வழக்கின் எதிரிகள் எந்த வொரு திருட்டு சம்பவமும் செய்யவில்லை, அவர்கள் பணிபுரிந்த டிவிஎஸ் நிறுவனத்தில் எதிரிகள் தங்களுக்கு நிரந்தர பணி கேட்டு போராட்டம் நடத்தியதால் டிவிஎஸ்

நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த பொய் வழக்கை எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் எனது காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்தவை என்றால் சரியல்ல. எங்கள் காவல் நிலைய புள்ளிவிவர கணக்கிற்காகவும், எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்காவும், டிவிஎஸ் நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகளுக்கு எதிராக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.